**அனுராதபுரம் மாவட்டத்தின் 42 கமநலசேவை குழுக்கள் - 2024**

---

**1. கணக்காய்வு அபிப்பிராயம்**

**1.1** அனுராதபுரம் மாவட்டத்தின் 42 கமநலசேவை குழுக்களின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் பிரிவு 58(1) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** அனுராதபுரம் மாவட்டத்தின் 42 கமநலசேவை குழுக்கள் தொடர்பாக வெளியிடப்பட்டிருந்த 42 கணக்காய்வு அறிக்கைகளில் அறிக்கைகளில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வழங்கப்பட்டிருந்ததுடன், இதற்கு காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**1.3 நிதிக்கூற்றுக்கள்**

**1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் உள்ளடங்களாக கணக்கீட்டு கொள்கைகளுடன் இணங்காமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கமநல வங்கி, கமநல சேவைக் குழுவின் அலகொன்று என்பதால் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்பதால், 42 கமநல சேவைக் குழுக்களால் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடங்களில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 06 கமநல சேவைக் குழுக்களால் நிதிக்கூற்றுக்களுடன் கமநல வங்கியின் கணக்கீட்டு கொள்கை வெளிப்படுத்தப்பட்டிராததுடன், நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடங்களில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிதிக்கூற்றுக்களுடன் கணக்கீட்டு கொள்கைகளை வெளிப்படுத்துவதற்கு மற்றும் நிதிக்கூற்றுக்களை கடந்த வருடத்துடன் ஒப்பிட்டு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 17 கமநலச் சேவைக் குழுக்களின் நிதிக்கூற்றுக்களில் இருப்பு மதிப்பிடலுக்குப் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கையும், 9 கமநலச் சேவைக் குழுக்களின் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான | எதிர்வரும் ஆண்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் இருப்பு மதிப்பிடல் மற்றும் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வுக் கொள்கை |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமானத்தேய்வுக் கொள்கையும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | இறுதி இருப்பானது, கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதிக்கு மதிப்பிடப்பட வேண்டிய போதிலும், 17 குழுக்களினால் தேறிய தேறக்கூடிய பெறுமதி கணிக்கப்படாமல் இருப்பானது கிரயத்தின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இறுதி இருப்பானது, கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதிக்கு மதிப்பிடப்பட வேண்டும். |

### 1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 22 கமநல சேவை நிலையங்களுக்கு சொந்தமாக காணப்படும் கட்டிடங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து நடைமுறையல்லாத சொத்துக்களாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலத்தில் பெறுமதியை மதிப்பீடு செய்து உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. | கமநல அபிவிருத்தித் திணைக்களதத்தின் அறிவுரைகளுக்கமைய கமநல சேவை நிலையத்திற்கு சொந்தமான கட்டிடங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கு வைக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் கமநல வங்கி மற்றும் 24 கமநல சேவை குழுக்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 18,128,928 தொகையான 85 இயந்திர உபகரணங்கள் நடைமுறையல்லாத சொத்துக்களாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடங்களில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நடைமுறையல்லாத சொத்துக்களை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 10 கமநல சேவை குழுக்களுக்கு வழங்கப்பட்டிருந்த 08 கன்றுகளை நடும் இயந்திரங்களின், 06 களை எடுக்கும் இயந்திரங்களின், 11 கன்றுகளை நடும் இயந்திரங்களின், 07 நீர் தாங்கிகளின், 02 தண்ணீர் மோட்டர்களின், 04 புல் வெட்டும் இயந்திரங்களின், 01 ஸ்மார்ட் பலகை, 02 தொலைகாட்சி இயந்திரங்கள், டெப்பே உழவு இயந்திரத்தின், இரண்டு சக்கர உழவு இயந்திரத்தின் மற்றும் டிரைலரின், 02 நெல் மிதிக்கும் இயந்திரங்கள், டிஸ் கலப்பையொன்றின், மண் கட்டும் | இந்த இயந்திரங்களின் பெறுமதிகளை இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. | கமநல சேவை நிலையங்களுக்கு சொந்தமான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதிகளை இனங்கண்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரமொன்றின், வாள் சுனாமியொன்றின், நடமாடும் பொலிலரொன்றின், விதைக் கன்றுகளை கழற்றும் இயந்திரமொன்று, மடிகணினியொன்றின் மற்றும் கூட்டெரு சலிக்கும் இயந்திரமொன்றின் பெறுமதியை இனங்கண்டு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கு வைப்பதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 05 கமநல சேவைக் குழுக்களால் கடந்த வருடங்களுக்காக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 431,927 கூட்டுத்தொகையான செலவினத்தை மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கு வைக்கப்பட்ட காரணத்தால் மீளாய்வாண்டின் மிகை அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடத்தில் செலவினங்களை சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | ஆண்டுக்குரிய செலவினங்களை சரியாக இனங்கண்டு கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 06 கமநலச் சேவைக் குழுக்களின் 22 நடைமுறையல்லாச் சொத்துக்கள் தொடர்பிலான பரிசீலனையிலுள்ள ஆண்டின் பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 2,370,679 ஆக இருந்தபோதிலும், நிதிக்கூற்றுக்களில் அப்பெறுமதியானது ரூபா 659,381 எனக் காட்டப்பட்டிருந்தமையால், ஆண்டின் மிகை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் ரூபா 1,711,298 ஆல் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தன. | எதிர்வரும் ஆண்டில் திரண்ட நிதியத்திற்குச் சீராக்கித் திருத்தப்படும். | ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு சரியாகக் கணிக்கப்பட்டுக் கணக்கிலிடப்பட வேண்டியதுடன், உரிய சீராக்கல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | 06 கமநல சேவைக்குழுக்களின் மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி ரூபா 290,179 இனால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டமையால், ஆண்டின் மிகையானது அந்த அளவினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிலையான வைப்பு வட்டியைச் சரியாக அடையாளங்கண்டு கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (எ) | 02 கமநல சேவை மத்திய நிலையங்களின் விற்பனை நிலையங்களைப் புனரமைப்பதற்காகச் செலவிடப்பட்ட ரூபா 302,585 மூலதனச் செலவினம், வருவாய்ச் செலவினமாக | எதிர்வரும் காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | மூலதனச் செலவினம் மற்றும் வருவாய்ச் செலவினம் என்பவற்றைச் சரியாக அடையாளங்கண்டு |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | | கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | யக்கல்ல கமநல சேவைக்குழுவின் மீளாய்வாண்டின் இறுதிக்கான நிதி நிலைமைக்கூற்றில், நடைமுறையல்லாத சொத்துகளின் கீழ் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் மீதியைக் காட்டும் போது, அவற்றுடன் தொடர்புடைய திரட்டப்பட்ட தேய்மானம் ரூபா 422,453 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. இதனால் நிதி நிலைமைக்கூற்றில் நடைமுறையல்லாத சொத்துகள் அதே அளவினால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தன. | 2025 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கிரயத்திலிருந்து சரியான திரட்டப்பட்ட தேய்மானத்தைக் கழித்து, அதன் தேறிய பெறுமதியை நிதி நிலைமைக்கூற்றில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | 15 கமநல சேவைக்குழுக்களினால் மீளாய்வாண்டிலும் அதற்கு முந்தைய ஆண்டுகளிலும் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 10,658,409 பெறுமதியான இயந்திர உபகரணங்களுக்கான மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வுப் பெறுமதியான ரூபா 1,454,443 நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் செலவினமாகக் காட்டப்பட்டிருக்காமையால் ஆண்டின் மிகையானது அந்த அளவினால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடத்தில் நிதிக்கூற்றுக்களில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | ஆண்டிற்குரிய பெறுமானத்தேய்வினை சரியாகக் கணித்து கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அதற்குரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஒ) | ரனோராவ கமநல சேவைக்குழுவின் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 3,789,000 பெறுமதியான 21,050 கிலோகிராம் MOP உர இருப்பு, இறுதி இருப்பாகக் கணக்கில் கொள்ளப்படவில்லை. இதனால் நடைமுறைச் சொத்துகளும் மிகையும் அப்பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | இருப்பின் பெறுமதிகள் நிதி நிலைமைக்கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஓ) | 03 கமநல சேவைக்குழுக்களின் 07 நடைமுறையல்லாத சொத்து விடயங்களின் மொத்தப் பெறுமதி ரூபா 1,222,680 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அப்பெறுமதி ரூபா 420,185 எனக் காட்டப்பட்டமையால் நடைமுறையல்லாத சொத்துகள் ரூபா 802,495 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன. | தலைமை அலுவலகத்தால் அந்த சொத்துக்களுக்குரிய செலவினங்கள் கமநல வங்கியின் திரண்ட நிதியத்திற்கு பதிவழிப்பதற்கு வழங்கப்பட்ட அறிவுரைகளுக்கு இணங்க சொத்துக்களாக கணக்கு வைக்க முடியாதிருந்தது என்பது. | கமநல வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துகள் கமநல சேவைக்குழுவின் நிலையான சொத்துகளாகக் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | தந்திரிமலே கமநல சேவைக்குழுவில் கடந்த ஆண்டில் கணக்கு வைக்கப்படாத 04 இயந்திர விடயங்களுக்குரிய ரூபா 924,776 திரட்டப்பட்ட தேய்மானப் பெறுமதியானது, மீளாய்வாண்டின் திரட்டப்பட்ட நிதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்து மீதிகளுடன் சீராக்கப்படவில்லை. | திரண்ட நிதியத்திற்கு சீராக்கிச் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய தேய்மானப் பெறுமதியைத் திரண்ட நிதியத்துடன் சீராக்கி, நடைமுறையல்லாத சொத்துகளிலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (க) | கெகிராவ கமநல சேவைக்குழுவின் நிதி நிலைமைக்கூற்றில் கிடைக்க வேண்டிய கமநல வங்கிப் பங்கிலாபம் ரூபா 1,172,429 எனக் கணக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும், கமநல வங்கி நிதிக்கூற்றுக்களில் கமநல சேவைக்குழுவிற்குச் செலுத்த வேண்டிய பங்கிலாபம் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | முறையான விதத்தில் செயற்பட்டு, கமநல வங்கியின் நிதி நிலைமைக்கூற்றில் செலுத்த வேண்டிய பங்கிலாபத்தை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (கா) | 34 கமநல சேவைக்குழுக்களின் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் கடன் பட்டோர்களுக்கான ஐயக்கடன் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படவில்லை. | எதிர்வரும் வருடத்தில் உரிய ஒதுக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | கடன் பட்டோர்களுக்காக உரிய ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (கி) | 17 கமநல சேவைக்குழுக்களினால் ஏக்கர் வரி, நிலையான வைப்பு வட்டி, வங்கிச் சேவைக் கட்டணங்கள் மற்றும் மூலதன வட்டி போன்ற சில வருமானங்கள் மற்றும் செலவினங்கள் பண அடிப்படையிலான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | எதிர்வரும் வருடத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | வருமானங்கள் மற்றும் செலவினங்கள் அட்டுறு அடிப்படையிலான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (கீ) | 1981 அக்டோபர் 16 திகதியிட்ட 107 ஆம் இலக்க கமநல சேவை ஆணையாளரின் சுற்றறிக்கையின் 30(4) ஆம் பிரிவிற்கமைய, குழுவிற்குச் சொந்தமான கட்டடங்கள், இயந்திர உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் முறையே ஆரம்பப் பெறுமதியில் 05 மற்றும் 20 சதவீத வீதத்திலும், தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் குறைந்து செல்லும் மீதி முறையில் 10 சதவீத வீதத்திலும் தேய்மானத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டில் 15 கமநல சேவைக்குழுக்களினால் இதற்கு முரணான வகையில் பெறுமானத் தேய்விடப்பட்டிருந்தன. | எதிர்வரும் வருடத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சுற்றறிக்கையின்படி சொத்துகளைத் தேய்மானத்திற்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அதற்குரிய சீராக்கங்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பலுகஸ்வெவ கமநல சேவைக்குழுவின் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று காணப்பட்ட நிலையான சொத்துப் பதிவேட்டின்படி சொத்துகளின் தேறிய பெறுமதி ரூபா 200,183 ஆக இருந்தபோதிலும், நிதி நிலைமைக்கூற்றில் அது ரூபா 1,162,000 எனக் காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 961,817 வேறுபாடு காணப்பட்டது. | பதில்கள் கிடைக்கப்பெறவில்லை. | முறையான வகையில் இணக்கப்பாடுகளைச் செய்து, நிலையான சொத்துப் பதிவேட்டின்படி நிலையான சொத்துகளின் பெறுமதியைச் சரியாக அடையாளங்கண்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 02 கமநல சேவைக்குழுக்களின் நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் நிதி நிலைமைக்கூற்றில் உள்ள நிலையான சொத்து மீதிகளுக்கு இடையே ரூபா 1,023,813 வேறுபாடு காணப்பட்டது. | எதிர்வரும் ஆண்டில் சீர்செய்யப்படும். | இணக்கமின்மைகளை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | எதாகடை கமநல சேவைக்குழுவின் கடந்த ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் இறுதி மீதி ரூபா 690,500 ஆக இருந்தபோதிலும், மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக ரூபா 1,031,456 கொண்டுவரப்பட்டமையால் ரூபா 340,956 வேறுபாடு காணப்பட்டது. | எதிர்வரும் ஆண்டில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஈ) | 02 கமநல சேவைக்குழுக்கள் மற்றும் ஒரு கமநல வங்கியின் நிதி அறிக்கைகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட பரீட்சை மீதியில், 2023 திசெம்பர் 31 ஆம் திகதிய மீதிக்கும் 2024 ஜனவரி 01 ஆம் திகதிய மீதிக்கும் இடையே 10 விடயங்கள் தொடர்பாக மொத்தம் ரூபா 1,839,606 வேறுபாடு காணப்பட்டது. | தட்டச்சுப் பிழை காரணமாக இது ஏற்பட்டுள்ளதுடன், எதிர்வரும் ஆண்டில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதியில் கெபித்திகொல்லேவ கமநல சேவைக்குழுவின் உர இருப்புப் பதிவேடுகளுக்கும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட அளவு ரீதியான | சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான வகையில் இணக்கப்பாடுகளை மேற்கொண்டு இருப்பு மீதிகளைச் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | இருப்பு கணக்கிற்கும் இடையிலான மீதிகளில் 04 இருப்பு விடயங்கள் தொடர்பாக ரூபா 5,774,291 வேறுபாடு காணப்பட்டது. | | வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதியில் எதாகட கமநல சேவைக்குழுவின் இருப்புப் பதிவேட்டின்படி மானிய விலையிலான யூரியா உர இருப்பு 20,900 கிலோகிராம் ஆக இருந்தபோதிலும், அளவு ரீதியான இருப்பு கணக்கின்படி அந்த மீதி 28,058 கிலோகிராம் ஆகக் காணப்பட்டமையால் 7,158 கிலோகிராம் வேறுபாடு காணப்பட்டது. | தவறுதலாக அளவு ரீதியான இருப்பு கணக்கில் ஏற்பட்ட பிழையைச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (எ) | மீளாய்வாண்டின் இறுதியில் கப்புகொல்லேவ கமநல சேவைக்குழுவின் நிதி நிலைமைக்கூற்றின்படி மானிய உர இருப்பு ரூபா 3,924,880 ஆக இருந்தபோதிலும், அளவு ரீதியான இருப்பு கணக்கின்படி அந்த மீதி ரூபா 594,102 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 3,330,778 வேறுபாடு காணப்பட்டது. | எதிர்வரும் ஆண்டில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஏ) | 02 கமநல வங்கிகளின் நிதிக்கூற்றுகளுக்கும் கடன் பட்டோர்கள் பேரேட்டிற்கும் இடையே 06 மீதிகள் தொடர்பாக ரூபா 183,517 வேறுபாடு காணப்பட்டது. | கட்டுப்பாட்டுக் கணக்குகளை இற்றைப்படுத்தி எதிர்வரும் ஆண்டில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான வகையில் இணக்கப்பாடுகளை மேற்கொண்டு சரியான மீதிகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க வேண்டும். |
| (ஐ) | 08 கமநல சேவைக்குழுக்களின் நிதிகூற்றுகளுக்கும் பேரேட்டுக் கணக்குகளுக்கும் இடையே 22 மீதிகள் தொடர்பாக ரூபா 2,468,672 வேறுபாடு காணப்பட்டது. | பேரேட்டை இற்றைப்படுத்திச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

### 1.3.4 தொங்கல் கணக்குகள்

| | கமநல சேவைக் குழு | விடயம் | தொகை ரூபா | தொங்கலாக இருந்த காலம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | ரனோராவ | நடைமுறைச் சொத்துகள் | 2,214 | 1985 ஆம் ஆண்டு முதல் | 1985 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப் படுகின்றமை | தொங்கல் கணக்கு மீதிகளை துரிதமாக தீர்ப்பதற்கு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கம்பிரிகஸ்வெவ | பொறுப்புகள் (வங்கி) | 705,714 | இனங்காண முடியாத மீதியொன்றாகும் | எதிர்வரும் வருடத்தில் இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | -மேற்படி- |
| (இ) | அனுராதபுரம் | ஏனைய வருமானங்கள் (இனங்காண முடியாத வருமானம்) | 30,000 | 2024 | விடயங்களை கண்டறிய முடியாதுள்ளது என்பது. | -மேற்படி- |
| (ஈ) | கப்புகொல்லேவ | நடைமுறைச் பொறுப்புகள் (நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்) | 185,680 | 2006 ஆம் ஆண்டு முதல் | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | -மேற்படி- |
| (உ) | பேமடுவ | நடைமுறைச் பொறுப்புகள் (தொங்கல் கணக்கு) | 358,861 | 2024 | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | -மேற்படி- |
| (எ) | சிராவஸ்திபுர | நடைமுறைச் சொத்துக்கள் (வருமானத்தை விஞ்சிய செலவினம்) | 400,103 | 1998 ஆம் ஆண்டு முதல் | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | -மேற்படி- |
| (ஏ) | ஆட்டியாகல | தொங்கல் கணக்கின் மீதி | 611 | 2020 ஆம் ஆண்டு முதல் | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | -மேற்படி- |
| (ஐ) | மடாடுகம | தொங்கல் கணக்கின் செலவு மீதி | 786,172 | பழைய மீதியொன்றாகும். | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | -மேற்படி- |
| (ஒ) | கல்லஞ்சிய | இருப்பு பற்றாக்குறை | 68,731 | 2024 | பதில் வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஓ) | கெக்கிராவ | தொங்கல் கணக்கின் மீதி | 557,660 | பல வருடங்களாக முன்கொண்டுவரப்படும் மீதியாகும். | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | -மேற்படி- |

### 1.3.5 கணக்காய்வுக்கான சான்றுகள் இல்லாதிருந்தமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 36 கமநல சேவைக்குழுக்களுக்குச் சொந்தமான மொத்தம் ரூபா 45,484,532 பெறுமதியான 61 நடைமுறையல்லாத சொத்து விடயங்கள், மொத்தம் ரூபா 315,899,017 பெறுமதியான 71 நடைமுறைச் சொத்து விடயங்கள், ரூபா 2,486,925 பெறுமதியான 02 நடைமுறையல்லாத பொறுப்பு விடயங்கள், மொத்தம் ரூபா 336,878,081 பெறுமதியான 50 நடைமுறைப் பொறுப்பு விடயங்கள், மொத்தம் ரூபா 21,736,391 பெறுமதியான 27 வருமான விடயங்கள் மற்றும் மொத்தம் ரூபா 8,151,062 பெறுமதியான 18 செலவின விடயங்கள் என்பன தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு, விபரமான துணைப் பட்டியல்கள், நிலையான வைப்புச் சான்றிதழ்கள், இற்றைப்படுத்தப்பட்ட கடன் பட்டோர் பதிவேடு, இற்றைப்படுத்தப்பட்ட கடன் கொடுத்தோர் பதிவேடு, மீதி உறுதிப்படுத்தல்கள், காலப் பகுப்பாய்வுகள், சமப்படுத்தப்பட்ட பேரேட்டுக் கணக்குகள், இருப்புப் பதிவேடுகள், காசுப் புத்தகங்கள், வங்கி இணக்கப்பாட்டுக்கூற்றுகள், வங்கி அறிக்கைகள், வைப்புப் பதிவேடுகள், வங்கித் தேர்ச்சிப் புத்தகங்கள், கமநல ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களினால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உர உறுதிச்சீட்டுகள் தொடர்பான தகவல்கள், கடன் பெறுவது தொடர்பான ஒப்பந்தங்கள், கடன் கொடுப்பனவு அறிக்கைகள், மேட்டு நிலங்களை உள்ளடக்கிய கமநல நிலப் பதிவேடு மற்றும் வருமானச் செலவினப் பதிவேடுகள் என்பன சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் மெய்மையாய்வு செய்தல் / சான்றுறுதிப்படுத்த முடியாமல் இருந்தது. | 2025 ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கைகளில் இக்குறைபாடுகளைச் சீர்செய்து, சரியான தகவல்களைச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான ஆவணங்கள், குறிப்புகள், அறிக்கைகள் மற்றும் உறுதிப்படுத்தல்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | சொத்துகள், பொறுப்புகள், வருமானங்கள் மற்றும் செலவின மீதிகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சான்றுகளைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2011 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க | | | |

| | | | |
|---|---|---|---|
| கமநல அபிவிருத்தி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டம் | | | |
| (i) 53 (i) ஆம் பிரிவு | 07 கமநலச் சேவைக் குழுக்களுக்காக அச்சுப்பொறிகளைக் (printer) கொள்வனவு செய்வதற்கு மொத்தப் பெறுமதியான ரூபா 446,040 உம், 22 கமநல வங்கிகளுக்காக மென்பொருள்கள் மற்றும் ஸ்கேனர்களை கொள்வனவு செய்வதற்கு மொத்தப் பெறுமதியான ரூபா 845,169 உம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை எனினும், அப்பெறுமதிகளைப் பெறவேண்டிய மீதிகளாகக் காட்டாமல் செலவினங்களாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய சொத்துக்களைச் சரியாக இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) 53(4)(அ) ஆம் பிரிவு | ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கு ஒருமுறை ஒவ்வொரு விவசாய நிலப் பதிவேடும் ஆணையாளர் நாயகத்தினால் பரிசோதிக்கப்பட்டு சான்றுப்படுத்தப்பட வேண்டும். இருப்பினும், 27 கமநல சேவை மத்திய நிலையங்களுக்குச் சொந்தமான 407 பிரிவுகளின் வயல் நிலப் பெயர் விபரப் பட்டியல்கள் ஆணையாளர் நாயகத்தினால் பரிசோதிக்கப்பட்டு சான்றுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | திருத்தங்களை மேற்கொண்டு ஆவணங்களைத் தயாரித்து ஆணையாளரிடம் சமர்ப்பிப்பதற்கும், உரிய ஆவணங்களைச் சான்றுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் | நட்டம் அல்லது சேதம் ஏற்பட்டவுடன் அதன் அளவு மற்றும் காரணங்களைத் | துரிதமாக விசாரணைகளை நடத்துவதற்குத் | நிதிப்பிரமாணங்களுக்கமையத் தாமதமின்றி |

| | | | |
|---|---|---|---|
| 104(6) | துல்லியமாக அறிவதற்கும், அதற்குப் பொறுப்பானவர்களைத் தீர்மானிப்பதற்கும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். இருப்பினும், சிவலாகுலம கமநல சேவைக்குழுவின் நிறைவேற்றுச் செயலாளரின் 2025 ஜுன் 20 ஆம் திகதிய கடிதத்திற்கமைய, 2023 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஏற்பட்டிருந்த ரூபா 241,980 பெறுமதியான இருப்புக் குறைபாடு தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பொறுப்பானவர்கள் எவரும் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இருப்புக் குறைபாடு தொடர்பான பொறுப்பானவர்களைத் தீர்மானிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், உரிய காலத்தில் கடமையாற்றாத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 137 | அங்கீகரிக்கப்பட்ட உறுதிச்சீட்டுகளுக்கு மாத்திரமே கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும். இருப்பினும், 08 கமநல சேவைக்குழுக்களில் மொத்தம் ரூபா 13,235,132 பெறுமதியான 225 உறுதிச்சீட்டுகளுக்கு எவ்வித அனுமதியுமின்றி கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன. | கையொப்பங்கள் பெறப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் அனுமதிக்கப்பட்ட உறுதிச்சீட்டுகளுக்கு மாத்திரமே கொடுப்பனவு வழங்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்களுக்கு இணங்க அங்கீகரிக்கப்பட்ட உறுதிச்சீட்டுகளுக்கு மாத்திரமே கொடுப்பனவு செய்ய வேண்டும் என்பதுடன், அவ்வாறு செய்யாத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) நிதிப்பிரமாணம் 137(5) | வழங்கல்கள் சம்பந்தப்பட்ட சந்தர்ப்பங்களில் அவற்றைப்பரிசோதித்துச் சரியாகப் பாரமேற்றுக்கொண்டமைக்குச் சான்றளிப்பது கொடுப்பனவுகளை அனுமதிக்கும் அதிகாரியின் பொறுப்பாக இருந்தபோதிலும், 07 கமநலச் சேவைக் குழுக்களுக்காக அச்சீட்டு இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு மொத்தப் பெறுமதியான ரூபா 446,040 உம், 22 கமநல | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் கோரப்பட்ட பொருட்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என்பதை உறுதிப்படுத்தியதன் பின்னர் மாத்திரமே கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வங்கிகளுக்காக மென்பொருள்கள் மற்றும் ஸ்கேனர்களை கொள்வனவு செய்வதற்கு மொத்தப் பெறுமதியான ரூபா 845,169 உம் பொருட்கள் கிடைக்கப் பெறுவதற்கு முன்னர் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | | |
| (iv) நிதிப் பிரமாணம் 139 | மொத்தம் ரூபா 3,886,959 பெறுமதியான 06 கமநல சேவைக்குழுக்களின் 72 உறுதிச்சீட்டுகள் மற்றும் மொத்தம் ரூபா 5,224,950 பெறுமதியான 03 கமநல வங்கிகளின் 58 உறுதிச்சீட்டுகள் சான்றுப்படுத்தப்படாமல் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன. | தற்போது சான்றுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் ஆண்டில் சீர்செய்யப்படும். | நிதிப்பிரமாணங்களுக்கு இணங்க சான்றுப்படுத்தப்பட்ட உறுதிச்சீட்டுகளுக்கு மாத்திரமே கொடுப்பனவு செய்ய வேண்டும் என்பதுடன், அவ்வாறு செய்யாத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (v) நிதிப் பிரமாணம் 264 | ஒவ்வொரு கொடுப்பனவுக்கும் உறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்ட தொகை கிடைக்கப்பெற்றமைக்கான உறுதிப்படுத்தல் பெறப்பட வேண்டும். இருப்பினும், 08 கமநல சேவைக்குழுக்களின் ரூபா 4,902,819 பெறுமதியான 114 உறுதிச்சீட்டுகள் தொடர்பாக இத்தகைய உறுதிப்படுத்தல்கள் பெறப்பட்டிருக்கவில்லை. | பற்றுச்சீட்டுகளைப் பெற்று நடவடிக்கை நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களுக்கமைய ஒவ்வொரு கொடுப்பனவுக்கும் உறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்ட தொகை கிடைத்தமைக்கான உறுதிப்படுத்தலைப் பெற வேண்டும். |
| (vi) நிதிப் பிரமாணம் 272 (3) | செலுத்தப்பட்ட உறுதிச்சீட்டுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டும். இருப்பினும், 02 கமநல சேவைக்குழுக்களினால் தினசரி காசுக் கொடுப்பனவுப் பதிவேட்டில் உள்ளடக்கப்படிருந்த ரூபா 6,231,775 பெறுமதியான 10 செலவின விடயங்களுக்குரிய 10 கொடுப்பனவு | இவ்வுறுதிச்சீட்டுகள் மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதால், அவற்றை மீளப் பெற நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையிலுள்ள உறுதிச்சீட்டுகளைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க வேண்டும், தவறும் பட்சத்தில் நிதிப் பிரமாணங்களுக்கமைய மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உறுதிச்சீட்டுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (இ) 1981 ஒக்தோபர் 16 திகதிய கமநல சேவைத் திணைக்களச் சுற்றறிக்கை இல. 107 | | | |
| (i) 21.2 ஆம் பந்தி | செயலாளர் குறைந்தது இரு வாரங்களுக்கு ஒருமுறையாவது இருப்புப் புத்தகங்களைப் பரிசோதித்து, தகவல்கள் சரியானவை எனத் திருப்தியடைந்த பின்னர் கையொப்பமிட வேண்டும். இருப்பினும், 11 கமநல சேவைக்குழுக்களில் இத்தகைய மேற்பார்வை நடவடிக்கைகள் இடம்பெறவில்லை. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடக், இணங்காத தரப்பினருக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) 30.2 ஆம் பந்தி | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் கடன் பட்டோர் மீதிகளின் சரியான தன்மையைப் பொருத்தமான கடன் பட்டோர்களிடமிருந்து உறுதிப்படுத்தி, அவ்வுறுதிப்படுத்தல்களை நிதிக்கூற்றுகளுடன் சமர்ப்பிக்க வேண்டும். இருப்பினும், 21 கமநல சேவைக்குழுக்கள் இவ்வாறு செயற்படவில்லை. | எதிர்காலத்தில் உறுதிப்படுத்தல் கடிதங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. | -மேற்படி- |
| (iii) 30 ஆம் பந்தியின் (3)(vii) | நிதிக்கூற்றுகளுடன் காசுப் பாய்ச்சல் கூற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருப்பினும், பலுகஸ்வெவ கமநல சேவைக்குழுவினால் மீளாய்வாண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்படவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில் லை. | -மேற்படி- |
| (ஈ) 2012 பிப்ரவரி 29 திகதிய 04/2012 ஆம் இலக்க கமநல வங்கிச் சுற்றறிக்கை | | | |
| (i) 2.4.1 ஆம் பந்தி | 12 கமநல சேவைக்குழுக்களினால் கமநல மக்களை ஊக்குவித்து | எதிர்காலத்தில் திட்டங்களை தயாரிப்பதற்கு | சுற்றறிக்கையின் பிரகாரம் திட்டங்களை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கான திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு செயற்படாத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (i) 3.15 (i) | 10 கமநல சேவைக்குழுக்களினால் அங்கீகரிக்கப்பட்ட விவசாயிகளின் பெயர்ப்பட்டியல் போகத்தின் ஆரம்பத்தில் கமநல சேவை மத்திய நிலையத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை. | சுற்றறிக்கையின் பிரகாரம் திட்டங்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு செயற்படாத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2016 பெப்ரவரி 09 ஆந் திகதிய 2016/03 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | ஒவ்வொரு விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தராலும் ஆகக் குறைந்தது 04 மாதங்களுக்கு ஒரு தடைவ கமநலச் சங்கங்களை பரிசோதித்து, கமநல பரிசோதனை அறிக்கையொன்றை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், 14 கமநல சேவைக் குழுக்களுக்கு கமநல ஆராய்ச்சிகள் மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறிக்கைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 2022 திசெம்பர் 28 திகதிய 04/2012 ஆம் இலக்க (திருத்தப்பட்ட vii) சுற்றறிக்கை | கமநல வங்கி (முன்னோடி) செயற்திட்டமொன்றில் வைத்திருக்கக்கூடிய கைவசக் காசின் அதிகபட்ச எல்லை ரூபா 50,000 ஆகும். இருப்பினும், 18 கமநல வங்கிகளில் 2024 ஆம் ஆண்டில் 515 சந்தர்ப்பங்களில் ரூபா 50,000 முதல் ரூபா 1,333,466 வரையான தொகை கைவசம் வைக்கப்பட்டிருந்தது. | மாலை 03 மணிக்கு மேல் பணம் கிடைத்தல், வங்கி கிளைகள் தொலைவில் அமைந்திருத்தல் மற்றும் சேதமடைந்த தாள்களை இயந்திரம் நிராகரித்தல் போன்ற காரணங்களால் இது நிகழ்ந்துள்ளது. | -மேற்படி- |
| (எ) | 2023 அக்தோபர் 05 திகதிய கமநல அபிவிருத்தி ஆணையாளரின் 7/5/9-05 (மெஹெ.ப) 3 ஆம் தொகுதி கடிதம் | புல்நேவ கமநல சேவைக்குழுவினால் விலைக் கோரல்களை ஒப்பிட்டுப் பார்க்காமல், 2024 ஏப்ரல் 25 அன்று தனியார் கம்பனியொன்றிடமிருந்து ரூபா 428,750 பெறுமதியான 2,450 கிலோகிராம் யூரியா கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | கமநல அபிவிருத்தி ஆணையாளரின் 7/5/9-05 (மெஹெ.ப) ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் விலைமனுக் கோரல் அத்தியாவசியமற்றது என்பது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின்படி செயற்பட வேண்டும். |
| (ஏ) | 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை (178) | நிறுவனத்திடம் உள்ள அனைத்து நிலையான சொத்து விபரங்களையும் உள்ளடக்கிய நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட வேண்டும். இருப்பினும், கெகிராவ கமநல சேவைக்குழுவிடம் உள்ள ரூபா 1,617,233 தேறிய பெறுமதியுடைய நிலையான சொத்துகளுக்குப் பதிவேடு எதுவும் பேணப்படவில்லை. | நிலையான சொத்துப் பதிவேட்டைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துப் பதிவேடொன்றைப் பேண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள 42 கமநல சேவைக்குழுக்களின் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுப் பெறுபேறுகளின் கூட்டுத்தொகை ரூபா 39,735,294 மிகையாக காணப்பட்டதுடன், அதற்கு ஒத்த கடந்த ஆண்டின் மிகையானது ரூபா 55,282,612 ஆகக் காணப்பட்டது. இதற்கமைய, நிதிப் பெறுபேறுகளில் ரூபா 15,547,318 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டதுடன், 42 கமநல வங்கிகளின் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுப் பெறுபேறுகளின் கூட்டுத்தொகை ரூபா 16,268,775 ஆன மிகையாக இருந்தபோதிலும், அதற்கு இணையான கடந்த ஆண்டின் மிகை ரூபா 20,937,533 ஆகக் காணப்பட்டது. இதற்கமைய, வங்கியின் நிதிப் பெறுபேறுகளில் ரூபா 4,668,758 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. நிதிப் பெறுபேறுகளின் இந்த வீழ்ச்சிக்கு சேவை வழங்கல் வருமானம் ரூபா 30,750,745 இனாலும், கமநல அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஈட்டப்படும் வருமானம் ரூபா 3,981,719 இனாலும், செயற்பாடு சாரா வருமானங்கள் ரூபா 11,849,660 இனாலும் மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 1,462,211 இனாலும் வீழ்ச்சியடைந்தமை பிரதான காரணங்களாக அமைந்திருந்தன.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 நிதி முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று 04 கமநல சேவைக்குழுக்களின் நடைமுறைக் கணக்குகளில் மொத்தம் ரூபா 23,634,449 பணம் வைக்கப்பட்டிருந்தது. முறையான அனுமதியின் கீழ் அத்தொகையின் ஒரு பகுதியை முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்காததன் காரணமாக, ஈட்டியிருக்கக்கூடிய வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | நிலையான வைப்புக் கணக்கில் பணத்தை வைப்பிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான அனுமதியின் கீழ் மேலதிகப் பணத்தை முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சாலியபுர கமநல சேவைக்குழுவின் 2016 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான ஆவணங்கள் மற்றும் வங்கிக் கூற்று அறிக்கைகளுக்கமைய அடையாளங்காணப்பட்ட ரூபா 1,166,098 பெறுமதியான கைவசக் காசுப் பற்றாக்குறைக்கான காரணங்கள் அடையாளங்காணப்படவில்லை என்பதுடன், பொறுப்பான நபர்களிடமிருந்து அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக திணைக்கள மட்டத்தில் முதற்கட்ட விசாரணை நடைபெற்று வருவதால், விசாரணையின் தீர்மானங்களுக்கமையச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | விசாரணைகளைத் துரிதமாக மேற்கொண்டு, இழப்பிற்குப் பொறுப்பான நபர்களிடமிருந்து அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சாலியபுர கமநல சேவைக்குழுவில் 2019 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்படும் உறுதிச்சீட்டுகள் இல்லாத கொடுப்பனவுகளாகப் பதிவு செய்யப்பட்ட ரூபா 354,268 கொடுப்பனவுகள், 2015 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் மதிப்பிழந்த காசோலைகளாகக் காட்டப்பட்டுள்ள போதிலும் வங்கியினால் பணம் செலுத்தப்பட்ட ரூபா 33,230 அடையாளங்காணப்படாத கொடுப்பனவுகள் மற்றும் 2018 ஆம் ஆண்டில் காசோலைகள் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டும் அது குறித்து எவ்வித பதிவுகளுமற்ற ரூபா 57,274 கொடுப்பனவுகள் தொடர்பாக முறையான விசாரணை நடத்தப்பட்டுப் பொறுப்பான நபர்களை அடையாளங்காண நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக திணைக்கள மட்டத்தில் முதற்கட்ட விசாரணை நடைபெற்று வருவதால், விசாரணையின் தீர்மானங்களுக்கமையச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களுக்கமைய முதற்கட்ட விசாரணைகளை நடாத்தி, விசாரணைத் தீர்மானங்களின்படி அவசியமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்தினால் 2023 திசெம்பர் 30 ஆம் திகதி காசோலை மூலம் ரூபா 11,727,200 தொகை அனுராதபுரம் கமநல சேவைக் குழுவின் நடைமுறைக் கணக்கில் வைப்பிலிடப்பட்டு, 2024 ஆம் ஆண்டில் அவ்வப்போது மொத்தம் ரூபா 8,632,400 திரும்பப் பெறப்பட்டிருந்தது. இதற்கமைய ரூபா 3,094,800 மீதி மீளாய்வாண்டின் இறுதி நாளில் இன்னும் நிலுவையாக இருந்தது. வேறொரு தரப்பினரின் பணம் குழுவின் நடைமுறைக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தமைக்கான காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | பதில்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | பண வைப்பிலிடல்கள் மற்றும் மீளப்பெறல்கள் குறித்தும், அதற்கான அனுமதிகள் குறித்தும் முறையான விசாரணையை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | யக்கல்ல கமநல சேவைக்குழுவினால் 2024 திசெம்பர் 30 ஆம் திகதியன்று குழுவின் நடைமுறைக் கணக்கில் காசு மீதி ரூபா 66,872 ஆக இருந்த நிலையில், 2024 திசெம்பர் 30 மற்றும் 31 ஆம் திகதிகளில் மொத்தம் ரூபா 1,009,100 பெறுமதியான 02 காசோலைகள் விநியோகிக்கப்பட்டிருந்தன. | சேமிப்புக் கணக்கிலிருந்து நடைமுறைக் கணக்கிற்குப் பணத்தை மாற்றுமாறு வங்கிக்கு அறிவித்த போதிலும், பணம் மாற்றப்பட்டிருக்கவில்லை. | நடைமுறைக் கணக்கில் போதுமான மீதி இருப்பதை உறுதிப்படுத்திய பின்னரே காசோலைகளை விநியோகிக்க வேண்டும் என்பதுடன், வங்கி மேலதிகப்பற்று வட்டியைச் செலுத்தாதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான நெல் இருப்பை அரிசியாக்கி அரசாங்கக் களஞ்சியசாலைகளுக்கு வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ், தலாவ கமநல சேவைக்குழுவினால் 2006 ஆம் ஆண்டில் அரிசி ஆலை உரிமையாளர் ஒருவருக்கு வழங்கப்பட்ட நெல் இருப்பை அரிசியாக்கி மீள ஒப்படைக்காததன் காரணமாக, குறித்த அரிசி ஆலை உரிமையாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 4,341,936 மீதியை அறவிடுவதற்கு அனுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், குறித்த அரிசி ஆலை உரிமையாளர் உயிரிழந்தமையால் கடன் மீதியை அறவிட முடியாமல் போனதுடன், கமநல | பதில்கள் கிடைக்கப்பெறவில்லை. | குறித்த காலப்பகுதிக்குள் ஒப்பந்தத்திற்கமைய அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை குறித்து, பொறுப்பான தரப்பினருக்கு எதிராக அவசியமான மேலதிக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

சேவைக்குழுவிற்கு அந்த அளவினால் நட்டம் ஏற்பட்டுள்ளது.

**3.3 முகாமைத்துவ திறமையீனங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 32 கமநல சேவைக்குழுக்களின் நிதிக்கூற்றுக்களில் பல வருடங்களாகக் காணப்படுகின்ற மொத்தம் ரூபா 272,651,704 பெறுமதியான 261 பெறப்பட வேண்டிய கணக்கு மீதிகள் மீளாய்வாண்டிலும் அறவிடப்படாமல் இருந்தன. | தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறப்பட வேண்டிய மீதிகளைத் துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், உரிய காலத்தில் அறவிடத் தவறிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 29 கமநல சேவைக்குழுக்களின் நிதிக்கூற்றுக்களில் பல வருடங்களாகத் தொடர்ந்து முன்கொண்டுவரும் ரூபா 258,650,295 பெறுமதியான 210 செலுத்தப்பட வேண்டிய மீதிகள் மீளாய்வாண்டிலும் தீர்க்கப்படாமல் இருந்தன. | பலாகல கமநல சேவைக்குழுவினால் உள்ளகக் கணக்காய்வு விசாரணையொன்று நடத்தப்படுவதுடன், அதன் பின்னர் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். திரண்ட நிதியத்துடன் சீர்செய்வதற்கு அறிவுறுத்தல்கள் கோரப்பட்டுள்ளன. | முறையான விசாரணைகளை நடத்தி உறுதிப்படுத்திய பின்னர், செலுத்தப்பட வேண்டிய பெறுமதிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கமநல வங்கி (முன்னோடி) திட்டங்களின் கடமைகளை வினைத்திறனாகவும் திருப்திகரமாகவும் நிறைவேற்றும் நோக்கில், கமநல சேவைக்குழுக்கள் மற்றும் கமநல வங்கி (முன்னோடி) திட்டத்திற்காகத் தயாரிக்கப்படும் மென்பொருளை நிறுவுவதற்காக அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள 38 கமநல வங்கிகள் மற்றும் 32 கமநல சேவைக்குழுக்களுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு மொத்தம் ரூபா 21,835,674 தொகை 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதற்குரிய மென்பொருள் மற்றும் ஸ்கேனர் இயந்திரங்கள் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்றும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை என்பதுடன், 2025 ஜூலை 11 ஆம் திகதி வரையிலும் மென்பொருள் நிறுவப்படாமையினால் அதுவரை கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் பயன்பாடற்றுக் | இது குறித்து கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டு மென்பொருளை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் பயிற்சி கிடைத்த பின்னர் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும். | உரிய மென்பொருளைத் துரிதமாக நிறுவி, தேவையான பயிற்சி மற்றும் வழிகாட்டல்களை வழங்கி, இத்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு முறையான வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும். |

காணப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 16 கமநல சேவைக்குழு அதிகாரப் பிரதேசங்களுக்கு உட்பட்ட 6,920 கமநலக் குடும்பங்கள் பயன்பெறக்கூடிய 8225.75 ஏக்கர் வயல் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் வழங்கக்கூடியதாக மீளமைக்கப்பட வேண்டிய 195 சிறிய குளங்கள் மீளாய்வாண்டில் மீளமைக்கப்படவில்லை. இதனால் புதிதாகப் பயிர் செய்யக்கூடிய 556.85 ஏக்கர் வயல் நிலங்களில் பயிர் செய்ய முடியாமல் போயுள்ளது. | கடும் மழை காரணமாக உரிய காலத்தில் திருத்தப் பணிகளைச் செய்ய முடியாமல் போனமை மற்றும் முன்னுரிமைப் பட்டியலுக்கமைய புனரமைப்பு பணிகளைச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. | புனரமைக்கப்பட வேண்டிய சிறிய குளங்களை மீளமைப்பதன் மூலம் புதிதாகப் பயிர் செய்யக்கூடிய வயல் நிலங்களின் அளவை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 05 கமநல சேவைக்குழுக்களிடம் இருந்த மொத்தம் ரூபா 1,209,604 பெறுமதியான உர இருப்புகள் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் காலாவதியாகியிருந்தன. குறித்த உரம் காலாவதியாவதற்கு முன்னர் அவற்றைப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதி ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைய அவிருப்புகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உர இருப்புகள் காலாவதியாவதற்கு முன்னர் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்கு அல்லது மேலதிக இருப்புகளைத் திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | சிவலாகுலம கமநல சேவைக்குழுவின் களஞ்சியசாலையில் உரங்கள் ஒழுங்கற்ற முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. அத்துடன் வெள்ளப்பெருக்கு காரணமாக 352 கிலோகிராம் TSP உரம் பயன்படுத்த முடியாதவாறு அழிவடைந்துள்ளது. | எதிர்காலத்தில் களஞ்சியசாலை முறையாகப் பேணப்படும். | களஞ்சியப்படுத்தலின் போது உரங்களை முறையான வகையில் களஞ்சியப்படுத்தி வைக்க வேண்டும் என்பதுடன், அலட்சியமாகச் செயற்பட்ட தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | 2002 ஆகஸ்ட் 20 ஆந் திகதி தம்புத்தேகம கமநல சேவைக்குழுவிற்கு ஜப்பானிய "யென்" நிதியுதவியின் கீழ் வழங்கப்பட்ட நெல் ஆலை, இடப்பற்றாக்குறை மற்றும், இயக்கும் போது சூழல் பிரச்சினைகள் ஏற்பட்டமை காரணமாகவும், நெல்லை அரிசியாக்கும் முயற்சி தோல்வியடைந்ததாலும், 2025 மார்ச் 20 ஆம் திகதி வரையிலும் பயன்படுத்தப்படாமல் செயலற்றுக் காணப்பட்டதுடன், போதிய இடவசதியுடனான பொருத்தமான இடத்தில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்காததால் கிடைக்கக்கூடிய நன்மைகள் இழக்கப்பட்டன. | இடப்பற்றாக்குறை காரணமாகப் பயன்படுத்த முடியவில்லை. | போதுமான இடவசதியுள்ள பொருத்தமான பிரதேசத்தில் இதனை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | கொவிட் 19 அவசர நிலைமையின் கீழ் உலக வங்கி நிதியுதவியின் கீழ் கமநல சேவைகள் மாவட்ட அலுவலகத்தினால் 2021 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டு ராஜாங்கனை, மருதன்கடவலை மற்றும் பதவி பராக்கிரமபுர ஆகிய மையங்களுக்கு வழங்கப்பட்ட முறையே 818, 2567 மற்றும் 2567 சதுர அடிகள் பரப்பளவான ரூபா 27,552,497 கூட்டுப்பெறுமதியான 03 விதைக்களஞ்சியங்கள் மற்றும் அந்த செயற்திட்டத்தின் கீழ் அனுராதபுரம் மாவட்ட செயலகத்தினால் நிர்மாணிக்கப்பட்டுள சாலியபுர கமநல சேவை நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்த 2520 சதுர அடிகள் பரப்பளவான பெறுமதி குறிப்பிடப்படாத விதைக் களஞ்சியங்களை இந்த கமநல சேவை அதிகாரப் பிரதேசத்தினுள் களஞ்சியப்படுத்துவதற்கு வேறு பயிர்கள் பயிரிடப்படுவதில்லை என்பதால் 2025 ஜூலை 14 வரை பயன்பாடின்றி இருந்தன. மேலும், மேற்படி செயற்திட்டத்தின் கீழ் கமநல சேவை மாவட்ட அலுவலகத்தினால் மதவாச்சிய விதைக்களஞ்சிய நிர்மாணத்திற்காக ரூபா 2,954,945 முதற்கட்டமாகக் கொடுக்கப்பட்டிருந்தும் 2025 ஜூலை 14 வரை அதன் பணிகள் நிறைவடையவில்லை. | இந்த கமநல சேவை அதிகாரப்பிரதேசத்தினுள் களஞ்சியப்படுத்தும் அளவிற்குப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதில்லை. | விதைக்களஞ்சியங்களின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | நொச்சியாகம கமநல சேவைக்குழுவில் ரூபா 281,945 பெறுமதியான 15 இருப்பு விடயங்கள் தொடர்பாகப் பல வருடங்களாக நிதிக்கூற்றுக்களில் காணப்படும் இருப்புக் குறைபாட்டிற்குப் பொறுப்பானவர்களை அடையாளங்கண்டு அந்த பெறுமதியை அறவிடுவதற்கு மீளாய்வாண்டில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் மூலம் விசாரணையொன்று நடைபெற்று வருகின்றது. | விசாரணைகளைத் துரிதப்படுத்திப் பொறுப்பானவர்களை அடையாளங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | பலாகல கமநல சேவைக்குழுவினால் விற்றுப் பணம் செலுத்தும் அடிப்படையில் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட உரத்திற்காக 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று 07 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 2,563,602 அறவிடப்பட வேண்டியிருந்தது. | இதற்காக உள்ளகக் கணக்காய்வு விசாரணை நடைபெறுவதுடன், அதன் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | முறையாகச் செயற்பட்டு உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தைத் தாமதமின்றி அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | கமநல சேவை நிலையத்தினால் ஜப்பானிய நிதியுதவியின் கீழ் 2010 ஆம் ஆண்டில் ரூபா 250,000 ஆன தொகைக்கு 14 விவசாயிகளுக்கு தவணை முறையில் செலுத்தும் அடிப்படையில் வழங்கப்பட்ட 14 இரண்டு சக்கர உழவு இயந்திரங்களுக்காக மீளாய்வாண்டின் மார்ச் 26 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 2,356,380 அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், இப்பணத்தை அறவிடவோ அல்லது அவ்வுழவு இயந்திரங்களை மீளப் பொறுப்பேற்கவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த உழவு இயந்திரங்களை மீளக் கையகப்படுத்துவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | முறையான நடவடிக்கைகளை மேற்கொண்டு நிலுவைப் பணத்தை அறவிட வேண்டும் அல்லது அவ்வுழவு இயந்திரங்களை கமநல சேவை மத்திய நிலையத்திற்கு மீளப் பொறுப்பேற்க வேண்டும். |
| (ஔ) | அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள 40 கமநல சேவை மத்திய நிலையங்களில் ரூபா 2,130,000 செலவில் கைவிரல் அடையாள இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றில் 26 இயந்திரங்கள் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் செயலற்றுக் காணப்பட்டன. கமநல அபிவிருத்தி ஆணையாளரின் (சேவைகள்) 2020 ஒக்தோபர் 02 ஆந் திகதிய 7/5/7-01 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கமநல சேவை நிலையங்களில் சேவையாற்றும் அனைத்து உத்தியோகத்தர்களின் கைவிரலடையாள இந்திரங்களை பயன்படுத்தி ஒவ்வொரு மாதமும் 15 ஆந் திகதிக்கு முன்னர் வருகை மற்றும் வெளியேறல் அறிக்கைகளை கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்குமாறும், அனுராதபுரம் மாவட்ட கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளரின் 2021 மார்ச் 01 ஆந் திகதிய 19/03/05/04/05 (v) ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் ஒவ்வொரு மாதமும் 05 ஆந் திகதிக்கு முன்னர் வருகை மற்றும் வெளிச்செல்லல் அறிக்கை கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளருக்கும் சமர்ப்பிக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மத்திய நிலையத்தினால் வருகை மற்றும் வெளிச்செல்லல் அறிக்கைகள் பிரதி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிராமையால் கைவிரலடையாள இயந்திரங்களை நிறுவிய நோக்கம் நிறைவேறவில்லை. | பிரதி ஆணையாளருக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது. கொள்வனவு செய்த நிறுவனம் தற்போது இல்லாததால் மாவட்ட அலுவலகத்தின் மூலம் பழுதுபார்க்க அல்லது புதிய இயந்திரங்களை வாங்க நடவடிக்கை எடுக்கப்படும். அறிக்கைகளைப் பெறுவதற்கான தேவையான மென்பொருளை வழங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | முறையான விசாரணையை நடாத்தி கைவிரல் அடையாள இயந்திரங்களைப் பயன்படுத்தாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 26 கமநல சேவை மத்திய நிலையங்களினால் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் Geo Goviya வேலைத்திட்டம் தொடர்பாக மொத்தம் ரூபா 27,125,879 செலவினம் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், குறித்த கட்டமைப்பிற்கு தகவல்களைப் பதிவேற்றும் பணிகள் நிறைவடையாமையினால், 2024/2025 பெரும் போகத்திற்குரிய உர விநியோக வேலைத்திட்டத்திற்காக Geo Goviya தரவுக் கட்டமைப்பை பயன்படுத்த முடியாமல் போனதுடன், அதற்காக இதுவரை மேற்கொள்ளப்பட்ட செலவீனங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைய முடியாமல் இருந்தது. | தொழில்நுட்பப் பணிகள் நிறைவடையும் வரை agrarian.lk இணையதளத்தின் ஊடாக மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன், தேவையான பயிற்சி மற்றும் வழிகாட்டல்கள் கிடைத்த பின்னர் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான வேலைத்திட்டமொன்றை முன்னெடுத்து, தேவையான தகவல்களைத் தரவுககட்டமைப்பில் துரிதமாகப் பதிவேற்றி, உர விநியோக நடவடிக்கைகளுக்காக அதனைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | Geo Goviya வேலைத்திட்டத்தின் கீழ் 24 கமநல சேவை அதிகாரப் பிரதேசங்களிலுள்ள மொத்த வயல் நிலப்பரப்பான 179,663 துண்டுகளில் 159,041 துண்டுகள் அளவீடு செய்யப்பட்டு, வரைபடமாக்கப்பட்டு வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், எஞ்சிய 19,262 துண்டுகளை அளவீடு செய்து வரைபடமாக்கி வேலைத்திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டமைப்பில் சிக்கல்கள் காணப்படுவதால் அதனை முழுமைப்படுத்துவதில் சிரமங்கள் உள்ளன. தொழில்நுட்பக் குறைபாடுகளைச் சீர்செய்து துரிதமாக வரைபடமாக்க நடவடிக்கை எடுக்கப்படும். | கட்டமைப்பிலுள்ள குறைபாடுகளைச் சீர்செய்து, வரைபடமாக்கப்படாத நிலத்துண்டுகளைத் துரிதமாக வரைபடமாக்கி Geo Goviya வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 14 பொதுப்பணக் காசுப்பற்றுச் சீட்டுகளினால் அறவிடப்பட்ட மொத்தம் ரூபா 308,500 பெறுவனவுகள், கல்லஞ்சிய கமநல சேவைக்குழுவின் தினசரி காசு பெறுவனவுப் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. | பதில்கள் கிடைக்கப்பெறவில்லை. | முறையான விசாரணையை நடத்தி, பண மோசடி ஏதேனும் இடம்பெற்றிருப்பின் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், உள்ளகக் கட்டுப்பாடுகளைப் பலப்படுத்த வேண்டும். |

### 3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பூனேவ கமநல சேவை மத்திய நிலையத்திற்குச் சொந்தமான பிரபோதகம பிரிவில் கடமையாற்றும் கமநல ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் உத்தியோகத்தரினால் பேணப்படும் பதிவேட்டில் உள்ள மொத்த வயல் நிலப்பரப்பையும், விவசாயிகளின் பெயர் விபரப் பட்டியலில் பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பாக உள்ளடக்கி, 2023/2024 பெரும் போகம், 2024 சிறு போகம் மற்றும் 2024/2025 பெரும் போகங்களுக்குரிய உர மானியக் கொடுப்பனவுகளை வழங்கும்போது, துலான பிரதேசத்தில் வசிக்கும் 49 விவசாயிகளுக்குச் சொந்தமான 59 நிலத்துண்டுகளில் பயிர் செய்யப்படாத 47.5 ஹெக்டயார் நிலப்பரப்பிற்காக ரூபா 688,263 பெறுமதியான நிதி முறையற்ற வகையில் செலுத்தப்பட்டிருந்தது. | உள்ளகக் கணக்காய்வு ஐயவினாவுக்கமைய குறித்த நிதியை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் உயிரிழந்துள்ளமையால் அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிதி தொடர்பாக கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளரின் ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளன. | முறையான விசாரணையை நடத்தி, பொறுப்பான உத்தியோகத்தர்களைத் தீர்மானித்து, உரிய அறவீடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பூனேவ கமநல சேவை மத்திய நிலையத்தின் 2023/2024 பெரும் போகம், 2024 சிறு போகம் மற்றும் 2024/25 பெரும் போகங்களுக்குரிய துலான பிரதேசத்தில் வசிக்காத நபர்களின் பெயர்கள், அடையாள அட்டை இலக்கம் மற்றும் வங்கிக் கணக்கு இலக்கங்களை உள்ளடக்கி, 59 ஹெக்டேயர் வயல் நிலப்பரப்பிற்காக ரூபா 879,618 பெறுமதியான உர மானிய நிதி மோசடியாகத் தவறான கணக்கு இலக்கங்களுக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | பதில்கள் கிடைக்கப்பெறவில்லை. | முறையான விசாரணையை நடாத்தி, பொறுப்பான தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதுடன், குறித்த நிதியை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 கமநல சேவை மத்திய நிலையங்களுக்குச் சொந்தமான மொத்தம் ரூபா 670,480 பெறுமதியான 02 நீர் | சில சொத்துகள் ஏலத்தில் விற்பனை செய்யப்படும் எனவும், சில | செயலற்ற சொத்துகளைப் பழுதுபார்க்க அல்லது |

| | | | |
|---|---|---|---|
| | மோட்டார்கள், நெல் அறுவடை இயந்திரம் ஒன்று, மடிக்கணினி ஒன்று, ஸ்கேனர் இயந்திரம் ஒன்று, சேதன உர அரைக்கும் இயந்திரம் ஒன்று மற்றும் நிழற்படப்பிரதி இயந்திரம் ஒன்று என்பன பல வருடங்களாகப் பயன்பாடின்றி இருந்தன. | சொத்துகளைப் பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், சேதன உர அரைக்கும் இயந்திரத்தை வாடகை அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கும் வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. | முறைப்படி கழிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், சேதன உர அரைக்கும் இயந்திரத்தைப் பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 03 கமநல சேவைக்குழுக்களுக்கு 2021 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற 03 கூட்டெரு சலிக்கும் இயந்திரங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாடின்றி இருந்தன. | இவை உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாததால், வேறு நிறுவனங்களுக்கு அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சொத்துகளை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும் அல்லது முறைப்படி வேறு நிறுவனங்களுக்குக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 14 கமநல சேவை மத்திய நிலையங்களுக்குச் சொந்தமான 09 விதை நடும் இயந்திரங்கள், 01 தட்டுச் சுனாமி இயந்திரம், 01 மேலதிக கலப்பை, 01 மண் வரப்பு போடும் இயந்திரம், 01 விதை அகற்றும் இயந்திரம், 02 களை பிடுங்கும் இயந்திரங்கள், 2,000 பரசூட் தட்டுகள், 01 நீர் மோட்டார், 01 இருசக்கர உழவு இயந்திர இழுவைப்பெட்டி, 03 புல் வெட்டும் இயந்திரங்கள், 01 நான்கு சக்கர உழவு இயந்திரம், 01 இருசக்கர உழவு இயந்திரம், 67 நீர் மட்டமானிகள் மற்றும் 01 பை தைக்கும் இயந்திரம் என்பன நீண்ட காலமாகப் பயன்பாடின்றி இருந்தன. | சில சொத்துகள் பழுதுபார்க்கப்படும் எனவும், நீர் மட்டமானிகளைப் பொருத்த பிரதான அலுவலகத்திடம் ஆலோசனைகள் பெறப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. | பழுதுபார்க்கக்கூடிய சொத்துகளைப் பழுதுபார்த்துப் பயன்பாட்டிற்கு எடுக்க வேண்டும் என்பதுடன், நீர் மட்டமானிகளைப் பொருத்தவும், பயன்படுத்த முடியாத சொத்துகளை முறைப்படி கைத்தவிர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 07 கமநல சேவை மத்திய நிலையங்களுக்குச் சொந்தமான 07 கணினிகள், 01 நடமாடும் கொதிகலன், 06 அச்சுப்பொறிகள், 02 தொலைநகல் இயந்திரங்கள், 04 நிழற்படப்பிரதி இயந்திரங்கள், குளிரூட்டியொன்று மற்றும் பாதுகாப்புப் பெட்டகமொன்று என்பன நீண்ட காலமாகப் பயன்பாடின்றி இருந்தன. | பழுதுபார்க்கக்கூடிய சொத்துகள் பழுதுபார்க்கப்படும் எனவும் ஏனையவை ஏலத்தில் விற்பனை செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. | செயலற்ற சொத்துகளைப் பழுதுபார்த்துப் பயன்படுத்த அல்லது முறைப்படி கழிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 02 கமநல சேவை மத்திய நிலையங்களுக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்களை மீளமைத்துப் பயன்பாட்டிற்கு எடுக்க | கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளருக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டு, நிதி ஒதுக்கீடுகளைப் | உத்தியோகபூர்வ இல்லத்தை மீளமைத்து வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்காததன் காரணமாக, வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்ததுடன், இல்லத்தைச் சூழவுள்ள நிலப்பரப்பு துப்புரவு செய்யப்படாமையால் புதர்கள் அடர்ந்து காணப்பட்டது. | பெற்று மீளமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அதன் வளாகத்தை முறையாகப் பேண வேண்டும். |
| (ஊ) | 03 கமநல சேவை மத்திய நிலையங்களின் விற்பனை நிலையங்கள் 05 வருடங்களுக்கும் மேலாக எவ்வித விற்பனை நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படாமல் இருந்தன. | இவை கிராமப்புறங்களில் அமைந்துள்ளதால், ஏனைய விற்பனை நிலையங்களுடன் போட்டியிட முடியாதுள்ளது. | முறையான நடவடிக்கைகளை மேற்கொண்டு இவ்விற்பனை நிலையங்களை வாடகைக்கு வழங்க அல்லது மத்திய நிலையத்தின் பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | ‘‘எக்க மிட்டட கொவி பிமட” வேலைத்திட்டத்தின் கீழ் யக்கல்ல கமநல சேவை மத்திய நிலையத்திற்கு வழங்கப்பட்ட ‘‘கொவி செவன” கட்டிடம் 2020 ஆம் ஆண்டிலிருந்து பயன்பாடின்றி காணப்பட்டது. | விவசாயி ஒருவருக்கு வழங்குவதற்காகப் பிரதேச செயலாளரிடம் முன்மொழியப்பட்டுள்ளது. | மத்திய நிலையத்திற்கு வழங்கப்பட்ட கட்டிடங்களின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.7 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 கமநல சேவைக்குழுக்களுக்காக மொத்தம் ரூபா 968,000 பெறுமதியான 03 கணினிகளைக் கொள்வனவு செய்யும் போது, பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.11.1 ஆம் பிரிவிற்கமைய, விலைக்கேள்வி மதிப்பீடு நிறைவடைந்தவுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மதிப்பீட்டு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு அனைத்து உறுதிப்படுத்தல் ஆவணங்களுடன் பெறுகைகள் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருப்பினும், குறித்த விலைக்கேள்வி மதிப்பீட்டு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், | குறித்த கொள்வனவு நிறுவனம் கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளரினால் அங்கீகரிக்கப்படும் எனவும், அறிவுறுத்தல்களுக்கமைய வருங்காலக் கொள்வனவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் கொள்வனவு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதுடன், அவ்வாறு செயற்படாத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12.3 ஆம் பிரிவிற்கமைய, பொருட்கள் கிடைக்கப்பெற்ற பின்னர் அவை உரிய விபரக்கூற்றுகளுக்கும் ஏனைய இணங்கிக்கொள்ளப்பட்ட நிபந்தனைகளுக்கும் அமைய உள்ளனவா என்பதையும், உத்தரவாதச் சான்றிதழ்கள் மற்றும் கையேடுகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும் உறுதிப்படுத்திச் சான்றுப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.8 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 கமநல சேவைக்குழுக்களின் அதிகாரப் பிரதேசங்களுக்கு உட்பட்ட 53 கமநல ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் பிரிவுகளில், 27 பிரிவுகளுக்குரிய 27 கமநல ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் பணியிடங்கள் மற்றும் ஒரு கமநல அபிவிருத்தி பிரதேச உத்தியோகத்தர் பதவி, ஒரு முகாமைத்துவ உதவியாளர் பதவி உள்ளடங்கலாக மொத்தம் 29 பதவிகளுக்கான பதவி வெற்றிடங்கள் நிலவின. | அரசாங்கத்தினால் கமநல ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படும் போது இவ்வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளர் ஊடாகப் பிரதான அலுவலகத்திற்கு இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. | பதவியணிப் பகுப்பாய்வொன்றை மேற்கொண்டு, அத்தியாவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 02 கமநல சேவை மத்திய நிலையங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களில் 15 பேர், தொடர்ச்சியாக 06 வருடங்கள் முதல் 25 வருடங்கள் வரையான காலப்பகுதியாக ஒரே மத்திய நிலையத்தில் கடமையாற்றி வருவதுடன், இவ்வுத்தியோகத்தர்கள் தொடர்பாக இடமாற்றக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர் பற்றாக்குறை இதற்குக் காரணமாக அமைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. | இடமாற்றக் கொள்கைக்கமைய குறித்த உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1. நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 1981 அக்டோபர் 16 ஆம் திகதிய 107 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 30.3 ஆம் | எதிர்வரும் ஆண்டுகளில் உரிய திகதியில் கணக்குகளைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | குறிக்கப்பட்ட திகதியில் வருடாந்தக் கணக்குகளைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

பந்திக்கமைய, நிதி ஆண்டு நிறைவடைந்து 03 மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் வருடாந்தக் கணக்குகள் கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருப்பினும், சிவலாகுலம கமநல சேவைக் குழுவினால் மீளாய்வாண்டிற்குரிய வருடாந்தக் கணக்குகள் 73 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2025 ஜூன் 13 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 5. கமநல வங்கிகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரிவுக்குள் சிறிய குழுக்களை நிறுவுவதும் அவர்களைச் சுழற்சியான முறையில் கமநல வங்கியுடன் பங்களிக்கச் செய்வதும் அப்பிரிவிற்குப் பொறுப்பான கமநல ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் உத்தியோகத்தர்களின் பொறுப்பாகும். இருப்பினும், 21 கமநல சேவைக்குழு அதிகாரப் பிரதேசங்களில் உள்ள 97,198 கமநலக் குடும்பங்களில், கமநல வங்கியுடன் இணைந்து செயற்படும் சிறிய குழுக்களின் எண்ணிக்கை 3,368 எனும் மிகக்குறைந்த அளவாகவே காணப்பட்டது. | சிறிய குழுக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிரிவுக்குள் சிறிய குழுக்களை நிறுவுவதற்கும், அவர்களைச் சுழற்சியான முறையில் கமநல வங்கியுடன் பங்களிக்கச் செய்வதற்கும் கமநல ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 30 கமநல வங்கிகளில் 08 வைப்பு வகைகளுக்குச் சொந்தமான 98,294 மொத்தக் கணக்குகளில் 66,025 கணக்குகள் செயலற்ற கணக்குகளாகக் காணப்பட்டதுடன், இக்கணக்குகளைச் சுழற்சியான நிலைக்குக் கொண்டு வருவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. | செயலற்ற கணக்குகளைச் சுழற்சியான கணக்குகளாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான வேலைத்திட்டமொன்றை வகுத்து, கமநல வங்கிக் கணக்குகளைச் சுழற்சியான நிலைக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 31 கமநல வங்கிகளில் கமநலக் கடன், சோளக் கடன், செயற்திட்டக் கடன், அறுவடைக் கடன், சார லங்கா செயற்திட்டக் கடன் மற்றும் “சிதமு“ பெண் தொழில்முயற்சியாளர் கடன் வழங்கல் தொடர்பாக 2,238 | இக் கடன்பட்டோர்கள் கமநலத் நியாயசபைக்கும் அனுப்பப்படுள்ளமை. | கடன் வழங்கல் மற்றும் உரிய காலத்தில் கடனை அறவிடாமை தொடர்பாக முறையான விசாரணையொன்றை நடத்தி, உத்தியோகத்தர்கள் ஏதேனும் மோசடிகளில் ஈடுபட்டிருப்பின் |

| | | | |
|---|---|---|---|
| | விவசாயிகளிடமிருந்து ரூபா 55,459,187 கடன் தொகையையும் 1,318 விவசாயிகளிடமிருந்து ரூபா 8,679,128 வட்டித் தொகையையும் அறவிடுவதற்கு கமநல நியாயசபைக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை அவை தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய நிலையிலேயே காணப்பட்டன. | | அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதுடன், நிலுவைக் கடன்களைத் துரிதமாக அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 20 கமநல வங்கிகளில் கமநலக் கடன், சோளக் கடன், சார லங்கா கடன், செயற்திட்டக் கடன், “சிதமு“ பெண் தொழில்முயற்சியாளர் கடன், அறுவடைக் கடன், சார பூமி கடன் மற்றும் அறுவடைப் பாதுகாப்பு கடன் வழங்கல் தொடர்பாக 1,821 விவசாயிகளிடமிருந்து ரூபா 63,465,865 கடன் தொகையையும் 1,328 விவசாயிகளிடமிருந்து ரூபா 11,946,979 வட்டித் தொகையையும் அறவிட வேண்டியிருந்தது. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (உ) | 15 கமநல வங்கிகளில் கமநலக் கடன், சோளக் கடன், செயற்திட்டக் கடன், “சிதமு” பெண் தொழில்முயற்சியாளர் கடன் மற்றும் சௌபாக்கியா செயற்திட்டக் கடன் வழங்கல் தொடர்பாக 1,250 விவசாயிகளிடமிருந்து ரூபா 25,140,612 கடன் தொகையையும் 978 விவசாயிகளிடமிருந்து ரூபா 5,748,647 வட்டித் தொகையையும் அறவிட வேண்டியிருந்தது. | 298 விவசாயிகளுக்கு இறுதிக் கோரிக்கை கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதோடு, 952 விவசாயிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஊ) | பரங்கியாவாடிய கமநல வங்கியில் 2015/2016 மற்றும் 2017/2018 பெரும் போகங்களில் 75 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட சோளக் கடன்கள் மற்றும் “சிதமு” பெண் தொழில்முயற்சியாளர் கடன்களில் மொத்தப் பெறுமதியான ரூபா 768,519 கடன் தொகையையும் ரூபா 318,552 வட்டித் தொகையையும் ஒப்பந்தங்களில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக அறவிட முடியாமல் இருந்தது. | ஒப்பந்தங்களில் காணப்படும் குறைபாடுகள் காரணமாகச் சட்ட நடவடிக்கை எடுப்பதில் தடைகள் ஏற்பட்டுள்ளதோடு, மேலதிக நடவடிக்கைகளுக்காகப் பிரதி ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | கடன் வழங்கும் போது முறையான ஒப்பந்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், கடனை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | இப்பலோகம கமநல சேவை மத்திய நிலையத்தில் கடன் ஒப்பந்தங்கள் இல்லாமை, கடன் பட்டோர்கள் மரணமடைந்தமை போன்ற காரணங்களால் 17 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பயிர்ச் செய்கைக் கடன் மற்றும் 10 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட செயற்திட்டக் கடன் மற்றும் வட்டி உள்ளடங்கிய ரூபா 479,805 தொகையை அறவிடுவதற்குச் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாமல் போயுள்ளது. | நினைவூட்டல் கடிதங்களும் இறுதி அறிவித்தல்களும் அனுப்பப்பட்டுள்ளன. | கடன் வழங்கும் போது கடன் ஒப்பந்தங்களைப் பூரணப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், நிலுவைக் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | 2024 ஆம் ஆண்டில் 09 கமநல வங்கிகளுக்குச் சொந்தமான 268 பிரிவுகளில் 72 பிரிவுகள் ஊடாக எவ்வித பயிர்ச் செய்கைக் கடன்களும் வழங்கப்படவில்லை என்பதோடு, 139 பிரிவுகள் ஊடாக எவ்வித செயற்திட்டக் கடன்களும் வழங்கப்படவில்லை. | எதிர்காலத்தில் அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் கடன் வழங்க முயற்சி எடுக்கப்படுமென்றும், வழங்கப்படும் கடன்கள் போதுமானதாக இல்லையெனப் பொதுமக்கள் தெரிவிப்பதாகவும் கூறப்பட்டது. | கமநல வங்கியின் நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | கெகிராவ கமநல வங்கியில் 2024/2025 போகத்திற்குப் பூரணப்படுத்தப்படாத 07 கடன் விண்ணப்பப் படிவங்களுக்கு ரூபா 840,000 கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் வழங்கல்களை முறையான விதத்தில் மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், முறைக்கேடாகச் செயற்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஒ) | கமநல வங்கியின் பங்கு பேரேட்டினைப் பரிசோதிக்கும் போது, உறுப்பினர்கள் தமது பங்கு உரிமையை வளர்த்தெடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுடன், 1998 முதல் 2024 திசெம்பர் 31 வரையிலான சுமார் 25 வருட காலப்பகுதியில் 04 கமநல வங்கிகளினால் ஆரம்பிக்கப்பட்ட 5,464 பங்குக் கணக்குகளில் 1,248 கணக்குகள் ஆரம்ப வைப்பிற்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. | பிரிவு உத்தியோகத்தர்களுக்குத் தெளிவுபடுத்தி, எதிர்காலத்தில் கணக்குகளைச் செயற்படுத்த தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். | பங்குதாரர்களுக்குத் தெளிவுபடுத்தி அவர்களைச் சுழற்சியாக முறையில் கமநல வங்கியுடன் பங்களிக்கச் செய்வதற்கு கமநல ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | 2020 ஒக்தோபர் 08 திகதியிட்ட 09/2020 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின்படி, அனைத்துப் பதிவுசெய்யப்பட்ட கமநல அமைப்புகளின் கொடுக்கல் வாங்கல்களும் அந்தந்த கமநல வங்கியின் சேமிப்புக் கணக்கு ஊடாகவே மேற்கொள்ளப்பட வேண்டும். இருப்பினும், 04 கமநல சேவை மத்திய நிலையங்களில் இருந்த 173 கமநல அமைப்புகளில் 110 அமைப்புகள் கணக்குகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவில்லை. | கமநல அமைப்புகளுக்குத் தெளிவுபடுத்தி கணக்குகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | கமநல அமைப்புகளைச் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பிக்கத் தூண்டுவதற்குப் பிரிவுக்கு பொறுப்பான கமநல ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஔ) | நேகம்பஹ கமநல வங்கியில் பணியாற்றிய உத்தியோகத்தர் ஒருவரினால் மோசடி செய்யப்பட்ட ரூபா 2,421,653 தொகையில் ரூபா 2,178,208 மீள அறவிடப்பட்டிருந்ததுடன், மேலும் ரூபா 243,445 நிலுவை அறவிடப்பட வேண்டியிருந்தது. இப் பண மோசடி தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 மற்றும் இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் இரண்டாம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 31 ஆம் பிரிவின்படி முறையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பதில்கள் வழங்கப்படவில்லை. | முறைக்கேடுகளைச் செய்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் படி விசாரணைகளை நடத்தி, தாபனவிதிக் கோவையின் பிரகாரம் பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (க) | 2015 ஆம் ஆண்டிலிருந்து பலுகஸ்வெவ கமநல வங்கியில் பணியாற்றிய கமநல ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் உத்தியோகத்தரால் ரூபா 1,600,000 தொகையை மோசடி செய்து மீண்டும் கமநல வங்கியில் வைப்பிலிட்டிருந்தமை தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதோடு, முறைக்கேடு செய்த உத்தியோகத்தருக்கு எதிராக தாபனவிதிக் கோவையின் இரண்டாம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 31 ஆம் பிரிவின்படி பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பதில்கள் வழங்கப்படவில்லை. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (கா) | மிகிந்தலையில் 2001 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட ஜனதா லங்கா மிளகாய் விற்பனை கமநல கம்பனிக்கு வழங்கப்பட்ட ரூபா 1,275,000 கடன் தொகைக்குரிய ரூபா 1,975,233 வட்டித் தொகை மீளாய்வாண்டின் 31 ஆந் திகதி வரை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கமநல நியாயசபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. | உரிய காலத்தில் கடனை அறவிடாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதோடு, நிலுவைக் கடன்களைத் துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (கி) | நொச்சியாகம கமநல வங்கியின் நிதிக்கூற்றுக்களில் 2009 முதல் 2019 வரையான காலப்பகுதியிலிருந்து நிலுவையிலுள்ள ரூபா 2,782,707 பெறுமதியான 06 செலுத்தப்பட வேண்டிய மீதிகள் மீளாய்வாண்டிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எதிர்வரும் ஆண்டில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்தப்பட வேண்டிய மீதிகளை விரைவாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |